**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.131/2025**

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சுமதி (PW–1) | வயது | : | 54 /2026 |
| க/த பெயர் | : | திரு. தேவதாஸ் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | முக்குளம் சாத்தனூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் வாதியாவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறிப்பு | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| 1 | – | தேவதாஸ் அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | 07.03.2006 | பாப்பாநாடு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட மனு ரசீது (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) | வண்ண நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | – | 1ம் வாதியால் வடுவூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு | நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 23.12.2016 | தேவதாஸ் காணாமல் போனது குறித்து செய்தி வெளிவந்த தினமலர் நாளிதழ் | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 11.03.1994 | தேவதாஸ் முதல் மனைவி பத்மாவதி இறப்பு சான்று (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் | வா.சா.ஆ.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | – | வாதிகளின் ஆதார் அட்டை (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) | | வா.சா.ஆ.6 |

எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது கணவர் எந்த தேதியில் வீட்டிலிருந்து காணாமல் போனார் என்றால் 02.03.2006. எனது கணவர் காணாமல் போன பிறகு அவரை கண்டுபிடிக்க என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் பல இடங்களில் தேடி கிடைக்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், தினசரி நாளிதழிலும் விளம்பரம் கொடுத்தேன். உறவினர்கள் வீட்டில் இருக்கிறாரா என்பது தொடர்பாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், அவர் அங்கும் இல்லை.
2) 2 முதல் 6 வாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் 2 முதல் 4 வாதிகள் தேவதாசுக்கும் அவரது முதல் மனைவியான பத்மாவதிக்கும் பிறந்த குழந்தைகள், 5 மற்றும் 6 வாதிகள் தேவதாசுக்கும் எனக்கும் பிறந்த குழந்தைகள். பத்மாவதி இறந்த பின்னர் என்னை திருமணம் செய்தாரா என்றால் ஆமாம்.
3) எனது கணவர் காணாமல் போனது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் புகார் கொடுத்தேன், வழக்கு பதிவு செய்யப்படவில்லை. எனது கணவர் காணாமல் போய் எத்தனை வருடம் ஆகின்றது என்றால் சுமார் 20 வருடம் ஆகிறது. எனது கணவரை கண்டுபிடிக்க சரிவர முயற்சி செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.18 16:04:53 +0530

District Munsif
Mannargudi.